

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## மார்ச் - 2020

We Are Here..!! To Guide You..!!



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 16.03.2020

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்









# தமிழக நிகழ்வுகள்

- **நாகை மாவட்ட காவல்துறை** சார்பில், சர்வதேச மகளிர் தினத்தையொட்டி **பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பை வலியுறுத்தி** நடந்த **மினி மாரத்தான் போட்டியில்** ஏராளமானோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.
    - நாகை மாவட்ட காவல்துறை சார்பில், அவுரித்திடலில், போட்டியை **எஸ்.பி.,செல்வநாகரத்தினம்** கொடியசைத்து துவக்கி வைத்தார்.
    - பெண்கள் மற்றும் குழந்தைகளை பாதுகாப்போம், பாலின பாகுபாடுகள் இல்லாத உலகை உருவாக்குவோம் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக நடந்த மினி மாரத்தான் போட்டியில், 300 பெண்கள் உட்பட 700க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.
    - **செய்தி துளிகள்**
        - மாரத்தான் என்பது சாலையில் தொடர்ந்து நெடுந்தொலைவு ஓடும் போட்டியாகும். இப்போட்டியில் கடக்க வேண்டிய தொலைவு 42.195 கிலோமீட்டர் ஆகும். இப்போட்டி 1896ஆம் ஆண்டிலிருந்தே ஒலிம்பிக் விளையாட்டாக இருந்தபோதும் 1921ஆம் ஆண்டில் தான் விதிமுறைகள் சீர்தரப்படுத்தப்பட்டன.

- **கொரோனா தடுப்பு** நடவடிக்கைகளுக்காக **தமிழக அரசு** சார்பில் **ரூ. 60கோடி நிதி ஒதுக்கீடு** செய்யப்பட்டுள்ளது.

We Shine Academy TM

- தமிழக சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறைக்கு ரூ.30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதுபோல, போக்குவரத்துத் துறைக்கு ரூ. 5 கோடி, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ரூ. 4 கோடி, நகராட்சி நிர்வாகத்துக்கு ரூ. 6 கோடி, ஊரக வளர்ச்சித் துறைக்கு ரூ. 5 கோடி, பேரூராட்சி இயக்குநரகத்துக்கு ரூ. 2 கோடி, இந்து சமய அறநிலையத் துறைக்கு ரூ.3 கோடி, பள்ளி கல்வித் துறை மற்றும் உயர் கல்வித் துறைக்கு ரூ. 2 கோடி, அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.0.5 கோடி மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு ரூ.2.5 கோடி என மாநில பேரிடர் நிதியிலிருந்து மொத்தம் ரூ.60 கோடி உடனடியாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.
- **செய்தி துளிகள்**
  - தமிழ்நாடு ஆளுநர் : திரு பன்வாரிலால் புரோகித்
  - தமிழ்நாடு முதலமைச்சர் : திரு எடப்பாடி கே.பழனிசாமி
  - தமிழ்நாடு தலைமை நீதிபதி : திரு அமரேஷ்வர் பிரதாப் சாஹி

## தேசிய நிகழ்வுகள்

- மத்திய அரசின் சார்பில், **விவசாய நிலங்களில் சூரியசக்தி மின் நிலையம் அமைக்கும் திட்டம்**, செயல்பாட்டில் உள்ளது. விவசாயிகள், 30க்கு 40 அடி என்ற அளவில், தங்கள் நிலத்தை மின் வாரியத்திடம் ஒப்படைத்தால், அங்கு, **10 கிலோ வாட் திறன் கொண்ட சோலார் மின் நிலையம் அமைக்கப்படும்**. இதன் மூலம்,

அதிகபட்சம், **7.50 குதிரைத்திறன்** கொண்ட மோட்டார்களை, விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

- இதற்காகும் செலவில், மத்திய அரசு, 40 சதவீதமும், மாநில அரசு, 30 சதவீதமும் வழங்கும். மீதமுள்ள தொகை, வங்கிக்கடன் மூலம் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.
- **செய்தி துளிகள்**
  - தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தரமானச் சான்று பெற்ற நெல் விதைகள் ஒரு கிலோவுக்கு ரூ.10 மானிய விலையில் வழங்கப்படுகிறது.
  - விவசாயக் கூலித் தொழிலாளர்களின் பற்றாக்குறை காரணமாக இயந்திரமயமாக்குதலை ஊக்குவிக்கும் வகையில் **நடவு இயந்திரம்** கொண்டு **நெல் நடவு செய்பவர்களுக்கு ஓர் ஏக்கருக்கு ரூ.1500 மானியம்** வழங்கப்படுகிறது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **ஓமன் ஐடிடிஎ.்.ப் டேபிள் டென்னிஸ் சேலஞ்ச் ஓபன் போட்டியில்** இந்திய நட்சத்திர வீரர் **சரத் கமல் சாம்பியன் பட்டம்** வென்றார்.
  - 10 ஆண்டுகள் காத்திருப்புக்கு பின் அவர் மீண்டும் ஐடிடிஎ.்.ப் பட்டத்தை கைப்பற்றியுள்ளார்.
  - மஸ்கட்டில் மார்ச் 15 அன்று இரவு நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் முதல் நிலை வீரர் போர்ச்சுகலின் மார்கோஸ் ப்ரைடாஸை 6-11, 11-8, 12-10, 11-9, 3-11, 17-15 என்ற கேம்

கணக்கில் வீழ்த்தி பட்டத்தை கைப்பற்றினார்.

- **செய்தி துளிகள்**
  - கடந்த 2010-இல் எகிப்து ஓபன் போட்டியில் பட்டம் வென்றிருந்தார். 2011, 2017-இல் அரையிறுதியோடு வெளியேறினார் சரத்.

- **ஆல் இங்கிலாந்து பாட்மிண்டன் போட்டி ஆடவர் ஒற்றையர் பிரிவில்** டென்மார்க்கின் **விக்டர் ஆக்ஸ்லெசன் சாம்பியன்** பட்டத்தைக் கைப்பற்றினார்.
  - மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் சீனாவின் உலக நம்பர் ஒன் வீராங்கனை சென் யூபெய் 21-14, 23-21 என்ற கேம் கணக்கில் ஜப்பானின் ஒகுஹராவையும், மற்றொரு அரையிறுதியில் சீன தைபேயின் டை சூ இங் 19-21, 21-13, 21-11 என ஸ்பெயினின் கரோலினா மரினையும் வீழ்த்தி இறுதிச் சுற்றில் நுழைந்தனர்.
  - கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியில் இந்தோனேஷியாவின் பிரவீன் ஜோர்டான்-மெலடி தவே இறுதிச் சுற்றில் தாய்லாந்தின் டேச்போல்-சப்சிரியுடன் மோதுகின்றனர்.
  - **செய்தி துளிகள்**
    - நூற்றாண்டு கால பழமை வாய்ந்த ஆல் இங்கிலாந்து ஓபன் பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் ஆண்டுதோறும் இங்கிலாந்தில் நடத்தப்பட்டு வருகிறது.

## திருக்குறள்

**குறள்: 139**

குறள் பால்: அறத்துப்பால்

குறள் இயல்: இல்லறவியல்

குறள் அதிகாரம்: ஒழுக்கமுடைமை

**ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய**

**வழுக்கியும் வாயாற் சொலல்.**

**விளக்கம்:** மறந்தும் தீயசொற்களை வாயினால் சொல்லும் செயல் நல்லொழுக்கம் உடையவர்க்கு ஆகாது.

We Shine Academy™